**செய்தி வெளியீடு எண் : 212** **நாள் : 01.02.2023**

## செய்தி வெளியீடு

### விவசாய சங்கப் பிரதிநிதிகள், வணிகர் சங்கப் பிரதிநிதிகள், மகளிர் சுயஉதவிக் குழு உள்ளிட்ட பல்வேறு சங்க பிரநிதிகளுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துரையாடல்

“கள ஆய்வில் முதலமைச்சர்” என்ற புதிய திட்டத்தின் கீழ் வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் அரசுத் திட்டங்கள் குறித்து நேரடியாக ஆய்வு மேற்கொள்வதற்காக இன்று (1.2.2023) வேலூர் மாவட்டத்திற்கு வருகை தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், விவசாய பிரதிநிதிகள், முப்பெரும் உழவர் பெருந்தலைவர் விவசாயிகள் சங்கம், முன்னோடி விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனம், தோல்பொருள் உற்பத்தியாளர்கள், வணிகர் பிரதிநிதிகள், மொத்த வாணிப பிரதிநிதிகள், பேருந்து மற்றும் லாரி உரிமையாளர்கள், மகளிர் சுயஉதவிக் குழுவினர், சிறு தொழில் நிறுவன அதிபர்கள் ஆகியோரின் கோரிக்கைகளைக் கேட்டு கலந்துரையாடினார்.

இந்த கலந்துரையாடலின் போது, பல்வேறு விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் இந்தியாவிலேயே முதல்முறையாக வேளாண்மை துறைக்கென தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்தமைக்காவும், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சி திட்டத்தை செயல்படுத்தியமைக்காகவும், ஒன்றரை லட்சம் விவசாயிகளுக்கு இலவச மின்சார இணைப்பு வழங்கியமைக்காகவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.

மேலும், தென்பெண்ணை – பாலாறு இணைப்புத் திட்டத்தை செயல்படுத்திடவும், குடியாத்தம் தினசரி மார்க்கெட்டை காய்கறி, மளிகை, பூ, பழம் மற்றும் இறைச்சி ஆகியவற்றை விற்பனை செய்திடும் அனைத்து வசதியுடன் கூடிய வணிக வளாகமாக அமைத்து தர வேண்டும் எனவும் பல்வேறு கோரிக்கைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் விவசாய சங்க பிரதிநிதிகள் வைத்தனர்.

தோல் பொருள் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் சார்பில் பேர்ணாம்பட்டு கிராமம் மற்றும் நகராட்சியில் அனைத்து தோல் தொழிற்சாலைகளை இணைத்து செயல்பட்டு வரும் பொது தோல் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வரும் மானியத்தை உயர்த்தி வழங்கிட வேண்டும் போன்ற பல்வேறு கோரிக்கைகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் வைக்கப்பட்டது.

பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் சார்பில் காட்பாடி இரயில்வே மேம்பாலத்தை ஒட்டி கூடுதலாக ஒரு மேம்பாலம் அமைத்து தர வேண்டும் என்றும், போக்குவரத்து நெரிசல் மிக்க காட்பாடி – பாகாயம் சாலைக்கு மாற்றுச் சாலை அமைத்து தர வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கைகள் வைக்கப்பட்டது. அதேபோன்று மொத்த வாணிப பிரதிநிதிகள் சார்பாகவும் பல்வேறு கோரிக்கைகள் வைக்கப்பட்டது.

பல்வேறு சங்கங்களின் கோரிக்கைகளை கேட்டறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அவற்றை பரிசீலித்து உரியவற்றை நிறைவேற்றி தருவதாக அவர்களிடம் தெரிவித்தார்.

மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி, பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி வருவதற்காக மகளிர் சுயஉதவிக் குழுவினர் தங்களது நன்றியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொண்டனர். மேலும் இத்தகைய நல்ல திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்திட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

இந்த கலந்துரையாடலின்போது, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. ஆர். காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. கதிர்ஆனந்த், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ப. கார்த்திகேயன், திரு.ஏ.பி. நந்தகுமார், திருமதி வி. அமுலு விஜயன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பெ. குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

••••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in